# QB365 Question Bank Software Study Material

## நுகர்வு சார்பும் முதலீடு சார்பும் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) நுகர்வுச் சார்பு என்றால் என்ன?

**பதில் :** வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே "நுகர்வு சார்பு" அல்லது "நுகர்வு நாட்டம்" என்கிறோம். இது "மொத்த நுகர்வு, மொத்த நாட்டு வருமானம் ஆகிய இரு ஒட்டுமொத்தத்திற்கிடையேயான சார்புத் தொடர்பாகும்."

இதனை = C = f (Y) எனலாம்.

இதில் C = நுகர்வு

Y = வருமானம்

f = சார்பு

2) " நுகர்வு நாட்டம்" என்றால் என்ன?

**பதில் :** 1. வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே "நுகர்வு சார்பு" அல்லது "நுகர்வு நாட்டம்" என்கிறோம்.

2. வருமானம் அதிகரிக்கும்போது நுகர்வும் அதிகரிக்கும்.

3) சராசரி நுகர்வு நாட்டம் (APC)-வரையறு

**பதில் :** வருமானத்திற்கும் நுகர்ச்சிக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும்.

கணித ரீதியாக, APC = $\frac{C}{Y}$

இதில் APC = Average Propensity to Consume

C = நுகர்வு

Y = வருமானம்

4) இறுதி நிலை நுகர்வு நாட்டம் (MPC)-வரையறு

**பதில் :** வருமான மாற்றத்திற்கும், நுகர்வு மாற்றத்திற்கும் இடையிலான விகிதம் இறுதிநிலை நுகர்வு நாட்டம் எனப்படும்.

$MPC = \frac{\Delta C}{\Delta Y}$

இதில், $\frac{\Delta C}{\Delta Y}$=Marginal Propensity to cinsume

ΔC = நுகர்வு மாற்றம்

ΔY = வருமான மாற்றம்

5) சேமிப்பு நாட்டம்(Propensity to save)என்றால் என்ன?

**பதில் :** வருமானத்திற்கும், சேமிப்பிற்கும் இடையேயான வீதமே சேமிப்பு நாட்டம் எனப்படும்.

6) சராசரி சேமிப்பு நாட்டம் (APS)-வரையறு.

**பதில் :** சராசரி சேமிப்பு நாட்டம் என்பது மொத்தச் சேமிப்பை மொத்த வருமானத்தால் வகுத்தால் கிடைக்கக்கூடிய ஈவுத்தொகையாகும்.

APS = $\frac{S}{Y}$

இதில், $\frac{S}{Y}$ = Average Propensity to save

S = சேமிப்பு

Y = வருமானம்

7) இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS)-வரையறு

**பதில் :** வருமான மாற்றத்திற்கும், சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயுள்ள வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டமாகும்.

$MPS = \frac{\Delta S}{\Delta Y}$

இதில், $\frac{\Delta S}{\Delta Y}$ = Marginal Propensity to save

$\Delta S$ = சேமிப்பு மாற்றம்

$\Delta Y$ = வருமான மாற்றம்

8) பெருக்கி-வரையறு

**பதில் :** நாட்டு வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என வரையறுக்கலாம்.

$\Delta I$என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், $\Delta Y$ என்பது வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கின்றது. எனவே,.

$K = \frac{\Delta Y}{\Delta I}$

9) முடுக்கி-வரையறு.

**பதில் :** கே.கே. குரிஹாரா என்பவரின் கூற்றுப்படி முடுக்கி என்பது, "தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்" என வரையறுத்துள்ளார்.

10) அரசாங்கம், நிறுவனங்களின் நோக்கங்கள் யாவை?

**பதில் :** 1. வாணிப நோக்கம்

2. முன்னேறும் நோக்கம்

3. நீர்மைதன்மை நோக்கம்

4. நிதி விவேக நோக்கம்.

## 3 மதிப்பெண் வினாக்கள்

10 x 3 = 30

11) கீன்சின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துகளைக் கூறுக.

**பதில் :** **விதியின் கருத்துக்கள் :**

இவ்விதி மூன்று கருத்துகளைக் கொண்டது.

1. வருமானம் உயரும்போது, நுகர்வுச் செலவு அதிகரிக்கும். ஆனால் சிறிய அளவாக இருக்கும். காரணம் வருமானம்

2. அதிகரிக்கும்போது, பகுதி பகுதியாக நம் விருப்பமும் நிறைவேறும்

3. அதிகரித்த வருமானம் நுகர்வுச் செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது.

4. அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வையும், சேமிப்பையும் அதிகரிக்கச் செய்யும்.

12) தன்னிச்சையான முதலீடு, தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.

**பதில் :**

| | தன்னிச்சையான முதலீடு | தூண்டப்படுகிற முதலீடு |
|---|---|---|
| 1 | தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது. |
| 2 | வருவாயைப் பொறுத்து நெகிழாது. | வருவாயைப் பொறுத்து நெகிழ்வது. |
| 3 | நல நோக்கமுடையது | இலாப நோக்கமுடையது |

13) நுகர்வுச் சார்பைப் பாதிக்கிற ஏதேனும் மூன்று அக, புறக் காரணிகளை விளக்குக.

**பதில் :** நுகர்வுச் சார்பை தூண்டுகின்ற காரணிகளை ஜே.எம்.கீன்சு இரண்டாகப் பிரிக்கின்றார். அதாவது அகவயக் காரணிகள், புறவயக் காரணிகள்.

**அகவயக் காரணிகள் :**

1. முன்னெச்சரிக்கை நோக்கம்: எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது. (எ.கா) விபத்து, உடல் நலனின்மை.

2. எதிர்பார்க்கும் நோக்கம் : எதிர்கால தேவைக்கான விருப்பம். (எ.கா) வயதான காலம்.

3. வணிக நோக்கம் : வணிகத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்.

**புறவயக் காரணிகள் :**

1. வருமானப் பகிர்வு : செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும். காரணம் செல்வந்தர்கள் குறைவான நுகர்வு விருப்பமும், அதிகப்படியான சேமிப்பு விருப்பமும் கொண்டு இருப்பர்.

2. விலை அளவு: நுகர்வுச் சார்பை தீர்மானிக்கின்ற 35 மிக முக்கியமான காரணியாக இருப்பது விலை அளவே ஆகும். வட்டி விகிதம் : அதிக வட்டி விகிதம் மக்களை அதிக அளவில் பணத்தைச் சேமிக்க ஊக்கமளிக்கும் மற்றும் நுகர்வைக் குறைக்கும்.

14) முடுக்கிக்கும் பெருக்கிக்கும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.

**பதில் :**

| | முடுக்கி Accelerator | பெருக்கி Multiplier |
|---|---|---|
| 1 | முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வையும். அதன் விளைவில் ஏற்படும் அதிகரிக்கும் தொடர்பையும் குறிக்கும் எண் மதிப்பு ஆகும். | நாட்டு வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதமே பெருக்கியாகும். |
| 2 | மூலதன பொருட்கள் தேவைப்படும் அளவுக்கு | தன்னிச்சையான முதலீட்டில் மாற்றம் உண்டு. |
| 3 | நிலையான மூலதனம் வெளியீட்டு விகிதம். | தூண்டப்பட்ட முதலீடு இல்லை. |
| | தேவையின் அதிகரிக்கும்: தன்மை நிலையம் இருக்கும். | இறுதிநிலை நுகர்வு நாட்டம் நிலையாக இருக்கும். |
| | நிதி அளிப்பு மற்றும் மற்ற உள்ளீடுகள் | நுகர்வு நடப்பு வருமானத்தைச் சார்ந்து அமையும். |
| | முடுக்கி($\beta$) = $\frac{\Delta I}{\Delta C}$ | பெருக்கி (K) = $\frac{\Delta Y}{\Delta I}$ |

15) மிகைப் பெருக்கி -விளக்குக.

**பதில் :** 1. மிகைப் பெருக்கி எளிய பெருக்கியை விட சிறந்ததாகும். ஏனெனில் எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும். ஆனால் மிகை பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.
2. ஆரம்ப முதலீட்டினால் வருமானத்தில் ஏற்படும் மொத்த விளைவை அறிய ஹிக்ஸ் K மற்றும் B ஐ இணைத்து மிகைப் பெருக்கி என்பதை கணித ரீதியில் உருவாக்கினார்.
3. மிகைப் பெருக்கியானது தூண்டப்பட்ட நுகர்வு, தூண்டப்பட்ட முதலீடு ஆகியவை இணைந்து செயல்படுவதாகும்.

16) பெருக்கி கருத்தின் குறைபாடுகளைக் குறிப்பிடுக.

**பதில் : பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துதல்:**

பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்காக அதிகரித்த வருமானம் பயன்படுமானால், MPC குறைந்து, அதன் காரணமாகப் பெருக்கியின் மதிப்பு தடைபடும்.

**செல்வத்தை வாங்குதல் :**

அதிகரித்த வருமானம் நடைமுறையில் உள்ள செல்வங்களாக நிலம், கட்டிடம் மற்றும் பங்குகள் முதலானவற்றை வாங்குவதற்காகப் பயன்படுத்தினால் பணம் மக்களிடையே சுழன்று கொண்டிருக்கும்.

நுகர்வுக்கு வராது. இதன் விளைவாக பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.

**பண்டங்களையும் பணிகளையும் இறக்குமதி செய்தல் :**

1. இறக்குமதி செய்யப்படுகின்ற பண்டங்களுக்காகவும், பணிகளுக்காகவும் வருமானத்தைச் செலவு செய்தால் நாட்டை விட்டு பணம் வெளியேறும்.
2. இது நாட்டின் குறிப்பிட்ட அளவு வருவாய் ஓட்டத்தில் திரும்பி வரும் வாய்ப்பு மிகக்குறைவு.
3. ஆதலால் இறக்குமதியானது பெருக்கியின் மதிப்பைக் குறைக்கும்.

**நுகர்வுப் பண்டங்கள் கிடைக்காமை :**

1. பெருக்கிக் கோட்பாடானது தேவை ஏற்பட்டவுடன் நுகர்வதற்கு பண்டங்கள் அளிக்கப்படுவதாக ஊகம் கொண்டுள்ளது.
2. சில நேரங்களில் பண்டங்கள் அளிப்பில் கால இடைவெளி ஏற்படும். இந்த இடைவெளியில் தேவைக்கேற்ப அளிப்பு இருக்காது.
3. அதனால் பணவீக்கம் ஏற்படும். இது நுகர்வுச் செலவையும், பெருக்கியின் மதிப்பையும் குறைத்துவிடும்.

**முழு வேலைவாய்ப்பு நிலை :**

1. முழு வேலை வாய்ப்பு நிலையில், பெரும்பாலும் எல்லா வளங்களும் பயன்படுத்தப்பட்டு இருக்கும்.
2. ஆதலால் அதிகரிக்கின்ற வருமானம் பணவீக்கத்திற்கு வழி வகுத்து, உண்மை வருமானம் ஏற்படாமல் செய்துவிடும்.

17) முதலீட்டுச் சார்பின் காரணிகள் யாவை?

**பதில் :** 1. வட்டி விகிதம்
2. நிலையற்ற தன்மை
3. அரசியல் சூழல்
4. மக்கள் தொகை வளர்ச்சி
5. மூலதனப்பொருட்களின் இருப்பு
6. புதிய பொருட்களின் தேவை
7. முதலீட்டாளர்களின் வருமான அளவு
8. கண்டுபிடிப்புகளும், புதிதாக்கலும்
9. நுகர்வுத் தேவை
10. அரசுக்கொள்கை

18) பெருக்கியின் பயன்கள் யாவை?

**பதில் :** 1. வருமானம் மற்றும் வேலைவாய்ப்புக் கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்துவத்தை பெருக்கி சுட்டிக் காட்டுகிறது.
2.வாணிப சுழற்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகின்றது.
3. சேமிப்பு மற்றும் முதலீடு இவற்றிற்கிடையே சமநிலை ஏற்பட உதவுகிறது.
4. அரசாங்க கொள்கைகளை வழிவகுக்க உதவிபுரிகிறது.
5. வேலையில்லா நிலையை போக்கவும், முழு வேலை வாய்ப்பு நிலையை அடையவும் உதவுகின்றது.

19) பெருக்கியின் பயன்கள் யாவை?

**பதில் :** (i) வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்து வத்தை பெருக்கி சுட்டிக் காட்டுகிறது.
(ii) வாணிப சுழற்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகின்றது.
(iii) சேமிப்பு மற்றும் முதலீடு இடையே சமநிலை ஏற்பட உதவுகிறது.
(iv) அரசாங்க கொள்கைகளை வகுக்க உதவி புரிகிறது.
(v) வேலையில்லா நிலையை போக்கவும்,முழு வேலைவாய்ப்பு நிலையை அடையவும் உதவும்.


20) வட்டி வீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள உறவை விளக்குக.

**பதில் :** (i) கடன்களின் மீதான வட்டி வீதம் உயரும் போது, குறைவான முதலீடே நடைபெறும்.
(ii) கடன் பெறுவதற்கான செலவு அதிகரிப்பதால், அதிக வருவாய் தரக்கூடிய இனங்களில் மட்டுமே முதலீடு செய்யப்படும்.
(iii) 5% யிலிருந்து 8% வட்டி அதிகரித்தால்,முதலீட்டின் அளவு Rs.100 கோடியில் இருந்து 80 கோடியாக குறையும்.
(iv) முதலீட்டிர்கான செலவு அதிகளவு வாய்ப்புச் செலவாக இருப்பதால் வட்டி வீதம் குறையும் போது, முதலீட்டை குறைக்கும் போக்கு ஏற்பட்டு விடும்.

## 5 மதிப்பெண் வினாக்கள் 5 x 5 = 25

21) கீன்சின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

**பதில் :**




1. "உளவியல் விதியின் அடிப்படையாக மனிதன் தன் முன் அறிவு அனுபவம், விரிவான உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் நம்பிக்கையுடன் வருவாய் உயரும்போது நுகர்வை அதிகமாக்குவார்கள்; ஆனால் வருவாய் கூடிய அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது".
2. இந்த விதி மனிதர்கள் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்யமாட்டார்கள் என எடுத்துரைக்கிறது.

**ஊகங்கள்**

1. மற்றவை மாறாது.
2. சுமூகமான சூழல் நிலவுகிறது.
3. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.

**விதியின் கருத்துக்கள்**

இவ்விதி மூன்று கருத்துக்களைக் கொண்டது.
1. வருமானம் உயரும்போது, நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.
2. அதிகரித்த வருமானம் நுகர்வுச் செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகிறது.
3. அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வையும், சேமிப்பையும் அதிகரிக்கச் செய்யும். இவ்விதியின் மூன்று கருத்துக்களும் அட்டவணை உதவியுடன் விளக்கப்படுகிறது.

கருத்துரை (1) : வருமானம் 60 கோடிகளாக அதிகரிக்கின்றது மற்றும் நுகர்வு 50 கோடிகளாக அதிகரிக்கிறது.
கருத்துரை (2) : அதிகரித்த 60 கோடி வருமானம்
இரண்டாக, நுகர்விற்கும், சேமிப்பிற்கும் இடையே முறையே பிரிக்கின்றது (அதாவது 50 கோடி நுகர்வும், 10 கோடி சேமிப்புமாக)
கருத்துரை (3) : வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வு மற்றும் சேமிப்பு அதிகரிக்கின்றது. நுகர்வோ சேமிப்போ குறையவில்லை.

அட்டவணை: விதியின் மூன்று கருத்துரைகள்

| வருமானம் y | நுகர்வு C | சேமிப்பு S = Y + C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

இங்கே வருமானம் படுகிடை (x)- அச்சிலும், நுகர்வுச் சேமிப்பு செங்குத்து (y)- அச்சிலும் அளவிடப்படுகிறது. C - என்பது நுகர்வுச் சார்ப்பு வளைகோடு 45 - டிகிரி கோடு வருமானமும், நுகர்வும் சம அளவாக இருப்பதைக் காட்டுகிறது.

22) நுகர்வுச் சார்பின் அக மற்றும் புறக் காரணிகளை விளக்குக.

**பதில் :** நுகர்வுச் சார்பைத் தூண்டுகின்ற காரணிகளை ஜே.எம்.கீன்சு இரண்டாக பிரிக்கின்றார். அவை அகவயக் காரணிகள் மற்றும் புறவயக் காரணிகள் ஆகும்.

**அகவயக் காரணிகள் :**

முன்னெச்சரிக்கை நோக்கம்: எதிர்பாராமல்

ஏற்படும் நிகழ்விற்காக, கையில் ரொக்கமாக வைப்பது. (எ.கா) விபத்து, உடல் நலனின்மை.

**எதிர்பார்க்கும் நோக்கம் :**

எதிர்கால தேவைக்கான விருப்பம்

(எ.கா.) வயதான காலம்.

**கணிக்கும் நோக்கம் :**

விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.

**முன்னேறும் நோக்கம் :**

வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்.

பணவியல் சுதந்திர நோக்கம்

**வணிக நோக்கம்:**

வணிகத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்.

**பெருமித நோக்கம் :**

சொத்தை தனது சந்ததியினருக்கு விட்டு செல்லும் விருப்பம்.

**பேராசை நோக்கம் :**

முற்றிலும் கஞ்சத்தனமான உள்ளுணர்வு

**புறவயக்காரணிகள் :**

புறவயக்காரணிகள் உண்மையானவை, அளவிடக்கூடியவை. நீண்ட காலங்களில் இந்தக் காரணிகள் எளிதாக மாற்றமடையும்.

**வருமானப் பகிர்வு :**

சமநிலை வருமானப் பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும்.

**விலை அளவு:**

விலை வீழ்ச்சியடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

**கூலி அளவு :**

கூலி அதிகரிக்கும்போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.

வட்டி வீதம்: அதிக வட்டி விகிதம் மக்களை அதிக அளவில் பணத்தைச் சேமிக்க ஊக்கமளிக்கும், நுகர்வைக் குறைக்கும்.

**நுகர்வோர் கடன் :**

எளிய தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது அவர்கள் நுகர்வோர் பண்டங்களான குளிர்பதனப் பெட்டி, ஊர்திகள், கணினி முதலானவற்றினை வாங்குவார்கள். இது நுகர்வை அதிகப்படுத்தும்.

**மக்கள் தொகை காரணிகள் :**

மற்றவை மாறாமல் இருக்கும் போது குடும்ப அளவு அதிகமாக இருந்தால், நுகர்வு அதிகமாக இருக்கும்.

23) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி

**பதில் :** 1. அரசு 100 கோடி பொதுப்பணிக்காக கூலியும், இதர பண்டங்கள் வாங்குவதற்காகச் செலவிடுகிறது எனக் கொள்வோம். இந்த 100 கோடியனாது உழைப்பாளர்களுக்கும் பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும்.

2. அவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 (80%) எனக் கொண்டால் 80 கோடியை நுகர்வுச் செலவுக்கும், மீதம் 20 கோடியைச் சேமிக்கவும் செய்வர்.

இதில் மேற்காண் வருமானம் பெற்றவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 எனில் 80 கோடியில் 64 கோடி நுகர்வுச் செலவுக்கும் மீதம் 16 கோடியை சேமிக்கவும் செய்வர். இந்த வழியில்

3. நுகர்வுச் செலவானது ஒரு சங்கிலித் தொடர் போன்று சென்று கொண்டே செல்லும்.

எனவே இறுதி முடிவுகள்

ΔY = 100 + 100 × 4/5 + 100x [4/5]2 + 100 x [4/5]3

அல்லது,

ΔY = 100 + 100 × 0.8+100x (0.8)2 + 100 x (0.8) = 100+80+64 +51.2...

= 500

அதாவது 100 × 1/1-4/5

100 x 1/1/5

100 × 5 = 500

உதாரணமாக C

100+ 0.8Y, I = 100,

என்றால் Y 1Y-0.8Y 0.2Y Y 100+0.8Y + 100 200 = 200/0.2 = 1000 → B

I இன் மதிப்பு 110, ஆக அதிகரிக்கப்பட்டால் 0.2Y = 210 Y = 210/0.2 = 1050 → D

1, 10 அதிகரித்தால், Y 50 அதிகரிக்கும்.

இது பெருக்கியின் விளைவு.

புள்ளி Aயில், Y = C = 500

C = 100+0.8 (500) = 500; S = 0

புள்ளி Bயில், Y = 1000

C = 100 + 0.8 (1000) = 900; S = 100 = I

புள்ளி Dயில், Y = 1050

C = 100 + 0.8 (1050) = 940; S = 110 = I


I மதிப்பு 10 அதிகரிக்கும் போது Y மதிப்பு 50 அதிகரிக்கும். இதுவே பெருக்கி விளைவாகும்.

$K = \frac{1}{0.2} = 5$

24) முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.

**பதில் :** முடுக்கி கோட்பாடு செயல்படும் விதம் : ஒரு எளிமையான எடுத்துக்காட்டின் மூலம் முடுக்கியின் செயல்பாட்டை அறியலாம்.

1. 1000 நுகர்வு பண்டங்களைத் தயாரிப்பதற்கு 100 இயந்திரங்கள் தேவைப்படுவதாகஎடுத்துக்கொள்வோம். 10 ஆண்டு அந்த இயந்திரங்களின் வாழ்நாள் எனக் கொள்வோம். அதாவது ஒவ்வொரு ஆண்டும் 10 எந்திரங்களை மாற்றியமைக்கப்படுகிறது. காரணம் நிலையான 1000 நுகர்வுப் பண்டங்களைத் தயாரிப்பதற்காக இதனை மாற்றியமைக்கும் தேவை ஏற்படுகிறது.
2. 10 விழுக்காடு அளவிற்கு (அதாவது 1000 லிருந்து 1100 ஆக) நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிக்கிறது என வைத்துக் கொள்வோம். இதன் விளைவாக மேலும் 10 இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். எனவே மொத்த இயந்திர தேவை 20 ஆகும். (10 மாற்றியமைப்பதற்காக மற்றும் 10 அதிகரித்த தேவையை சந்திப்பதற்காக) இங்கே 10 விழுக்காடு நுகர்வுப் பண்டங்கள் தேவையானது 100 விழுக்காடு இயந்திரத் தேவையை அதிகரிக்கின்றது என்பது குறிக்கின்றது. (10 லிருந்து 20 வரை).
3. ஆதலால் இறுதியாக நுகர்வுப் பண்டங்களின் தேவையில் ஏற்படும் ஒரு சிறய மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.




வரைபட விளக்கம்:

1. SS என்பது சேமிப்பு கோடு. II என்பது முதலீட்டு கோடு. $E_1$ என்ற புள்ளியில் பொருளாதாரம் $Oy_1$ வருமானத்துடன் சமநிலையில் இருக்கிறது.
2. சேமிப்பும் முதலீடும் $OI_2$ ல் சமநிலையாக உள்ளது.
3. முதலீடு $OI_2$ லிருந்து $OI_4$ ஆக அதிகரிக்கும் போது வருமானம் $Oy_1$ லிருந்து $O_{y3}$ ஆக அதிகரிக்கிறது.
4. அதிகரிக்கிற வருமானம் $Y_1Y_2$ ஆனது பெருக்கியின் விளைவாலும் மற்றும் அதிகரிக்கிற வருமானம் $y_2y_3$ ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

25) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

**பதில் :**

| | மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC) | முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறன் (MEI) |
|---|---|---|
| 1 | மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது. | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது. |
| 2 | ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிருந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. |
| 3 | வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது. | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு இருப்பு அளக்கப்படுகிறது. |
| 4 | இது ஒரு "இருப்பு" கருத்துரு. (Stock) | இது ஒரு ஓட்டக் (Flow) கருத்துரு. |
| 5 | ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது. | கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில், ஒவ்வொரு வட்டி விகித அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |